# DEPOSITION OF WITNESS

( Chapter XXV Bharatiya Nagarik Suraksha Sanhita, 2023)

***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 38/2025

Miscellaneous :

Sessions : PW 1

Deposition of Witness for

**எதிரி ஆஜர்.**

| | |
|---|---|
| Name | ரமேஷ் |
| Father / Husband Name | கோதண்டராமன் |
| Village | |
| Taluk | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Chapter X of Bharathiya Sakshya Adhiniyam, 2023, on the day of 24**.07.2025**

**முதல் விசாரணை:**

நான் சோத்துபாக்கத்தில் வசித்து மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி முகேஷை தெரியும். 17.12.2022 ம் தேதி மாலை 07.00 மணியளவில் நான் கடையில் வியாபாரம் பார்த்துக்கொண்டிருந்தபோது என் கடையில் முன்பகுதியில் முறுக்கு தேன்மிட்டாய் மிக்சர் சுமார் 100 ரூபாய் மதிப்புள்ள திண்பண்டங்கள் எடுத்தபோது அதற்காக நான் பணம் கேட்டேன். அதற்கு ஆஜர் எதிரி நான் யார் என்று தெரியுமா யான்கிட்டையே பணம் கேக்கிறாயா கோத்தா என்று அசிங்கமாக பேசி மறுபடியும் பணம் கேட்டதற்கு என் கன்னத்தில் அடித்துவிட்டார். எனக்கு மனஉளைச்சல் அதிகமாக இருந்ததால் மறுநாள் காலையில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் புகாரை நான்தான் கொடுத்தேன். **(அசா1 கொடுத்த புகார் அசாஆ1ஆக குறியீடு செய்யப்படுகிறது)** போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

ஆஜர் எதிரி எந்த ஊர் என்று தெரிந்துகொண்டேனா என்றால் சோத்துப்பாக்கம் பாலாஜி நகர் என்று தெரியும். எந்த தெரு என்று தெரியாது. ஆஜர் எதிரி முகேஷ் என்பவரின் தந்தை பெயர் தெரியாது. சம்பவம் எவ்வளவு நேரம் நடந்தது என்றால் 5 நிமிடம் இருக்கும். எதிரி என் கடையில் இருந்து காரசீடை தேன்மிட்டாய் மிக்சர் முறுக்கு கஜிராவை எடுத்தார். அவர் எடுத்த அனைத்து பொருட்களின் விலை ரூ.20 ஆகும். புகாரில் திண்பண்டங்களின் பெயர்களை குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். என் கடையில் இருந்து எனது வீடு சுமார் 300–400 மீ தூரத்தில் உள்ளது. கடைக்கும் காவல் நிலையத்திற்கும் 500 மீ இருக்கும். என் கடை வைத்திருக்கும் பகுதிக்கு சுற்றி நிறைய கடை இருந்தது. சம்பவம் நடந்த அன்று என் கடையில் கேமரா இல்லை. தற்போது சுமார் 1.5 வருடத்திற்கு முன் என் கடைக்கு கேமரா வைத்துள்ளேன். உண்மையிலேயே ஆஜர் எதிரி திண்பண்டங்களை எடுத்திருந்தால் கூச்சல் போட்டால் பக்கத்து கடையில் இருந்து வந்திருப்பார்கள் என்றால் சரிதான். நான் யாரையும்

கூப்பிடவில்லை. சம்பவத்தை அருகில் இருந்த பார்த்த சாட்சிகள் யாரும் இல்லை என்றால் சரிதான். எதிர் கடையில் இருந்தவர்கள் பார்த்தார்கள். எதிர் கடையில் இருந்து பார்த்தால் என் கடையில் என்ன நடந்தது என்று தெரியாது என்றால் சரிதான். நான் வைத்திருப்பது பெட்டி கடை அல்ல மளிகை கடைதான் போலிஸ் விசாரணையில் பெட்டி கடை என்று சொல்லியிருந்தால் அது தவறு என்றால் சரிதான். என்னுடைய மச்சான் அரிகிருஷ்ணன் சம்பத்தின்போது உடன் இல்லை. அவர் ஊருக்கு சென்றிருந்தார். சம்பவத்தின்போது என்னை மிரட்டு திண்பண்டங்கை எடுத்தவர் தாடி வைத்திருந்தார் தற்போது அவர்தான் ஆஜர் எதிரியா என்று எனக்கு சரியாக தெரியவில்லை. ஆஜர் எதிரி வங்கியில் பணிபுரிந்து வருவதால் அவருக்கு என் கடையில் திண்பண்டங்களை எடுக்கும் அவசியம் இல்லை என்றால் சரியல்ல. புகார் மறுநாள் காலை 10.00 மணியளவில் காவல் நிலையத்தில் வைத்து எழுதினேன். போலிசார் எப்படி எழுதவேண்டும் என்று சொன்னார்கள் நான் நடந்த சம்பவத்தை எழுதினேன். என் கடையில் திண்பண்டங்களை எடுத்த சென்றவரின் பெயரை என் கடைக்கு வந்தவர்கள் சொல்லி தெரியும். எனக்கு சொல்லிய நபர் பெயர் தெரியாது. சம்பவம் நடந்ததிருந்தால் போன் மூலம் வீடியோ பதிவு செய்திருக்கலாம் என்றால் சரிதான். நான் அடிக்கடி காவல் நிலையம் சென்றுவருவதால் போலிசாருக்கு பரிசீட்யமான நபர் என்றால் சரிதான். நான் புகார் கொடுத்து வந்துவிட்டேன். ஆஜர் எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்களா என்றும் அவரை கைது செய்து விசாரணை செய்தார்களாக என்றும் தெரியாது. போலிசார் சொல்லிதான் ஆஜர் எதிரி மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த பிறகு போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. போலிசார் எழுதிகொடுத்த புகாரில் நான் கையொப்பம் செய்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் சரியல்ல.